[1979 பிப்ரவரி 28

மதுராந்தகம் வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்

*137 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்தை மதுராந்தகம் வட்டம், செய்யூர் உப வட்டம் என்று பிரிக்க 1966-ல் ஏதேனும் ஆய்வு நடத்தப் பட்டதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மதுராந்தகம் வட்டத்தை, மதுராந்தகம் வட்டம், செய்யூர் உப வட்டம் என்று பிரிக்க அந்த மாவட்டக் கலெக்டர் ஆர்.டி.ஓ-விடம் அது பற்றிய பரிந்துரையை அனுப்பும்படி கேட்டிருக்கிறார். அவரிடமிருந்து பரிந்துரை மாவட்டக் கலெக்டருக்கு வரவில்லை.

அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன்

*138 வினா—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் திருமண செலவிற்காக முன்பு ஒதுக்கப்பட்ட தொகையைவிட தற்போது அதிகப்படியாகத் தமிழ்நாடு அரசு ஒதுக்கி உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: ஆம். வரவு-செலவுத் திட்ட நிதிஒதுக்கமாகிய ரூபாய் பத்து லட்சத்திற்கு மேற்பட்டு கூடுதலாக ரூபாய் பத்து லட்சத்தை அரசு ஒதுக்கியுள்ளது.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, திருமணக் கடனாக எவ்வளவு ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்? இதிலே கிராம அதிகாரிகள், கிராம முன்சிப் போன்றவர்கள் பணியாளர்களா அல்லவா என்பது குறித்து வருத்தப்படுகிறார்கள். அவர்கள் பெயரையும் அரசாங்கப் பணியாளர்கள் என்று மாற்றியமைக்க சர்க்கார் உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: திருமணக் கடனாக, பெண்கள் அலுவலர்களாக இருந்தால், அவர்களுடைய திருமணத்திற்கோ, அல்லது அவர்களுடைய பெண்கள் திருமணத்திற்கோ, 15 மாதச் சம்பளம் அல்லது ரூ. 2,000 அதிலே எது குறைவோ அந்தத் தொகை என்ற அளவிலும், ஆண் ஊழியர்கள் என்று சொல்லக் கூடாது, அலுவலர்களாக இருந்தால், அவர்களுடைய திருமணத்திற்கோ அல்லது அவர்களுடைய ஆண் குழந்தைகள் திருமணத்திற்கோ ரூ. 1000 அல்லது 15 மாதச் சம்பளம் இதிலே எது குறைவோ அந்த அளவிற்கு, திருமணத்திற்காக முன் பணமாகக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தத் திருமணக் கடன் அரசாங்க அலுவலர்கள் கடைநிலை ஊழியர்கள் வரையில் எல்லோருக்குமே கொடுக்கப்படுகிறது. தற்போது, நேற்றைய வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்படி, 'எய்டெட்' பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் ரூ. 500 வரையில் கொடுக்கப்படும்.